# உங்கள் இணைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல்



### மின் நுகர்வோர்க்கான சி.ஏ.ஜி யின் பிற வெளியீடுகள்

* மின் பட்டியலிடல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* மின் அளவி தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* புதிய மின் இணைப்பு பெறுவதற்கான வழிமுறைகள்
* தரமான சேவையும் மற்றும் குறைதீர் முறைகளும்


CAG
Citizen consumer and civic Action Group

New #246 (Old #277B), TTK Road (J.J. Road ),
Alwarpet, Chennai 600 018 INDIA
Ph:044-24994458 / 24660387

**சி.ஏ.ஜி.யின் இந்த வெளியீடானது நுகர்வோரின் மின் இணைப்பில் ஏற்படக்கூடிய மாற்றங்களும், அவற்றிற்கான வழி முறைகள், அவை நிறைவேற்றப்பட வேண்டிய கால அளவுகள் மற்றும் நிறைவேற்றப்படாவிடின், நுகர்வோர் பெறக்கூடிய நஷ்டஈடு போன்றவற்றை விவரிக்கின்றது. மின் சேவை தொடர்பான உரிமைகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம், சேவையின் தரத்தையும், மின்சார உரிமைதாரரின் வெளிப்படைத்தன்மையையும் அதிகரிப்பதே எங்கள் நோக்கமாகும்.**

## 1. தற்காலிக மின் இணைப்பு என்றால் என்ன?

தற்போது உள்ள மின் இணைப்பில் அடங்கிய பகுதியில், கூடுதலாக 2000 ச.டி அளவிற்கு குறைவாக கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டால் தற்போதுள்ள மின் இணைப்பினை பயன்படுத்தி கட்டுமான பணிக்கான மின்சாரத்தை உபயோகப்படுத்தலாம். அக்கூடுதல் கட்டுமானம் 2000 சதுர அடிக்குமேல் என்றால் தனியாக மின் இணைப்பு பெற வேண்டும். அது தற்காலிக மின் இணைப்பு என்ற கட்டண விகிதத்தில் இருக்கும்.

## 2. தற்காலிக இணைப்புக்கான கட்டணங்கள் என்ன?

தற்போது, 11.12.2014 முதல், நடைமுறையில் உள்ள கட்டணம்

- அ. நிலை கட்டணம் - ரூ.345/- இணைக்கப்பட்டுள்ள மின் சுமை கிலோவாட் ஒன்றுக்கு
- ஆ. மின் உபயோகம் ரூ.12.00 / யூனிட் ஒன்றுக்கு
- குடிசை இணைப்பு: முன்பு 40 வாட் மின் விளக்கு ஒன்று மட்டுமே குடிசை இணைப்பு என்ற பிரிவில் தகுதி பெற்றது. சுவர்கள் மண்ணாலும், கூறை ஓலையிலும் இருக்க வேண்டும் என்ற விதி இருந்தது.

அதன்பின் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையில், அவ்வாறு பலன் பெற்றவர்களுக்கு, தகுதிக்காக சில சலுகைகள் அறிவிக்கப்பட்டது. அதன்படி, அரசு அமைக்கும் சிமெண்ட், தகடு, கூறை, தொலைக்காட்சி பெட்டி, மின் விசிறி, மாவு அரைக்கும் இயந்திரம், மடி கணினி ஆகிய அரசால் அளிக்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையில் மின் சுமை தகுதி தளர்த்தப்படுகிறது. இதற்கு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்யும் மின் கட்டணத்தை அரசாங்கமே செலுத்துகிறது.

## 3. இதில் பின்பற்றப்படும் வழிமுறை என்ன?

மதிப்பீடு, பணி ஆணை, பட்டியல் வழங்குதல் போன்றவை சாதாரண மின் இணைப்புகளுக்கு பின்பற்றப்படும் வழி முறை போலவே இருக்கும்.

ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் மின் பயன்பாடு கணக்கிடப்படும். இவை வருமான கிளைக்கு அனுப்பப்பட்டு கணக்கிடுதல் செய்யப்படும்

## II. மின் இணைப்பு / மின் தொடர்கள் இடமாற்றம்

**1. மின் இணைப்பு / மின் தொடர்கள் இடமாற்றத்திற்கான வழி முறைகள் என்ன?**

மாற்றத்திற்கான கோரிக்கையை எழுத்து மூலம் பிரிவு அலுவலகத்திற்கு கொடுக்கவும்.

மாற்றுவதற்கு ஆகும் செலவு மதிப்பிடப்பட்டு உங்களுக்கு ஒரு பட்டியல் தரப்படும்

> **குறிப்பு: நடப்பிலுள்ள மின் இணைப்புக்கான நிலுவையிலுள்ள கட்டணம் ஏதேனும் இருந்தால் மாற்றுதலுக்கு முன்பே செலுத்தப்பட வேண்டும்**

**2. இதற்கு பொருந்தும் கட்டணங்கள் என்ன?**

a.பழைய இடத்தில் பிரித்தெடுப்பதற்கான செலவு

b.பழைய இடத்திலிருந்து புதிய இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து செலவு

c.புதிய இடத்தில் நிறுவுவதற்கான செலவு

d.பிரித்தெடுத்த ஆனால் புதிய இடத்தில் பயன்படுத்த இயலாத பொருட்களின் தேய்மான செலவு

e.தேவைப்படும் புதிய பொருட்கள்

f.பிரித்தெடுக்க முடியாத பொருட்களின் மதிப்பு

g.இதர செலவுகள்

போன்றவற்றை மீட்கும் வகையில் கட்டணம் வசூலிக்கப்படும்.

> **குறிப்பு: கதவின் இலக்கம் மாறினாலோ, சார் எண் மாறினாலோ அல்லது நில அளவை எண் மாறினாலோ, மின் இணைப்பு இடமாற்றம், புதிய மின் இணைப்பாகக் கருதப்படும்**

## III. மின் இணைப்பு பெயர் மாற்றம்

**1. எந்தெந்த சந்தர்ப்பங்களில் நான் மின்னிணைப்பு பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்?**

மின்னிணைப்பின் உரிமையாளர் இறக்கும் போது மற்றும் இடம் விற்கப்படும் போது மின்னிணைப்பு பெயர் மாற்றம் செய்யப்படும்

**2. மின்னிணைப்பு பெயர் மாற்றத்திற்கான வழிமுறை என்ன?**

மின்னிணைப்பின் உரிமையாளர் இறந்ததால் பெயர் மாற்றம் கோருவதானால், நீங்கள் தான் அவருடைய சட்டப்படியான வாரிசுதாரராக இருந்து மாற்றத்திற்கு விண்ணப்பிப்பதானால், பின்வரும் ஆவணங்களை பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்:

i. இறப்பு சான்றிதழ் மற்றும் சட்டப்படியான வாரிசுதாரர் சான்றிதழ்

ii. மற்ற சட்டப்படியான வாரிசுதாரர்கள் இருந்தால் அவர்களிடமிருந்து "ஆட்சேபணை இல்லை" என்ற பத்திரம்

iii. புதிய விண்ணப்பம் மற்றும் ஒப்பந்த பத்திரம்

**குறிப்பு: நடப்பு மின் பயனீட்டு கட்டணத்தில் செலுத்தப்படாத பாக்கி இருப்பின் அதை செலுத்திய பின் விண்ணப்பிக்கவும்**

**3. இதற்கு உண்டான கட்டணங்கள் என்ன?**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவு படி

| மின்னிணைப்பு பெயர் மாற்றம் | சட்டப்படி பெயர் மாற்றம் | விற்பனை போன்றவை |
|---|---|---|
| அ. வீடுகளுக்கு | ரூ.200/- | ரூ.200/- |
| ஆ. வேளாண் இணைப்பு | ரூ.200/- | ரூ.200/- |
| இ. குடிசைக்கான இணைப்பு | ரூ.50/- | ரூ.50/- |

## IV கட்டண வீதம் மாற்றம்

**1. கட்டண வீதம் எப்பொழுது மாற்றப்பட வேண்டும்?**

ஒரு குறிப்பிட்ட பயனுக்காக மின்னிணைப்பு பெற்றுவிட்டு, வேறு ஒரு கட்டண வீதத்திலிருக்கும் பயனுக்கு உபயோகப்படுத்த விரும்பினால், கட்டண வீதத்தை மாற்ற வேண்டும்.

வீட்டு உபயோகத்திற்காக பெறப்பட்ட இணைப்பை சிறு கைத்தொழில்களுக்காக பயன்படுத்தக் கூடாது. இவ்வாறான சந்தர்ப்பங்களுக்கு கட்டண வீதம் மாற்றப்பட வேண்டும்.

**2. கட்டண வீத மாற்றத்திற்கான வழிமுறை என்ன?**

கட்டண வீத மாற்றத்திற்கான காரணத்தை விளக்கி அதற்கான ஆவண சான்றிதழ்களுடன் பிரிவு அலுவலகத்திற்கு கோரிக்கை கடிதம் கொடுக்கவும்.

மாற்றிய சோதனை அறிக்கையை பெறவும். எடுக்கப்பட்ட எண்ணிக்கை அளவே மின்சாரம் வழங்கியதற்கான முடிவான அத்தாட்சி; மாற்றிய சோதனை அறிக்கையில் மாறிய கட்டண வீதம் குறிப்பிடப்படும்

**குறிப்பு: தாழ் அழுத்த வேளாண் அல்லாத கட்டண வீதத்திலிருந்து தாழ் அழுத்த வேளாண் கட்டண வீதத்திற்கு மாற்ற முடியாது**

## V. மின்னிணைப்பு துண்டிப்பு மற்றும் இணைப்பை மீட்டல்

### 1. என்னுடைய இணைப்பை எப்படி மீட்பது?

கட்டணம் செலுத்தாத காரணத்தால் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டால்,

அ. நிலுவைத்தொகை மற்றும் மறு இணைப்புக்கான கட்டணத்தை செலுத்தவும்

ஆ. பிரிவு அலுவலர் / மதிப்பீடு ஆய்வாளர் அவர்களிடம் தெரிவித்து மறு இணைப்பை பெறவும்

### 2. வேறு எந்த தருணங்களில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின்னிணைப்பை துண்டிக்கும்?

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஊழியர்கள் உங்கள் இருப்பிடத்திற்கு வந்து பார்வையிடவோ, சோதனை செய்யவோ அல்லது மின் அளவி, பொருத்தப்பட்டிருக்கும் சாதனங்கள் போன்றவற்றை நீக்கவோ நீங்கள் அனுமதிக்காவிட்டால் மின் வழங்கலை துண்டிக்கலாம். இச்சந்தர்ப்பங்களில், மின் வழங்கலை துண்டிக்கும் எண்ணத்தை எழுத்து பூர்வமாக 24 மணி நேர எச்சரிக்கை அறிவிப்பை உங்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வழங்க வேண்டும்.
- பரிசோதனை, மின் வழங்கல் தடைபடல், மின் பற்றாக்குறை மற்றும் பேணுதல் பணிகள் போன்ற காரணங்களால் குறிப்பிட்ட காலத்திற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின்வழங்கலை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். ஆனால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் கூடியவரை முன் கூட்டியே உள்ளூர் செய்தித்தாள்களில் அறிவிப்பு வெளியிட வேண்டும்.

### 3. மறு இணைப்புக்கான கட்டணங்கள் என்ன?

| இணைப்பு | கட்டணம் (ரூ) | |
|---|---|---|
| .அ. குடிசை இணைப்பு | 10/- | |
| ஆ. இணைக்கப்பட்ட சுமை 150 குதிரை சக்தி வரையிலிருந்தால் (எல்லா தாழ் அழுத்த இணைப்புகளுக்கும்) | ஒரு முனை இணைப்பு | மும்முனை இணைப்பு |
| 1. துண்டிப்பு இடத்தில் | .60/- | 60/- |
| 2. மேல் செல்லும் முக்கிய வழிபாதையில் | .60/- | 60/- |
| 3. தரையின் கீழ் செல்லும் முக்கிய வழி பாதையில் | 300/- | 300/- |

**ஆதாரம்: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்**

4. உங்களுடைய மின் வழங்கலுக்கு பின்வரும் செந்தரங்களுக்கு நீங்கள் உரியவராவீர்கள்:

| இணைப்பு | எடுத்துக்கொள்ளும் நேரம் |
|---|---|
| **தற்காலிகமான மின்னிணைப்பு வழங்க** | |
| A) நீட்டிப்பு அல்லது மேம்பாட்டுப் பணியேதும் தேவைப்படாத நிலை | 30 நாட்கள் |
| B) மின் மாற்றி தேவைப்படாத நீட்டிப்பு மற்றும் மேம்பாடு | 60 நாட்கள் |
| C) மின் மாற்றி தேவைப்படும் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு | 90 நாட்கள் |
| D) துண்டிக்கப்பட்ட தற்காலிக மின்னிணைப்பு வழங்கலின் வைப்புத்தொகை | 3 மாதங்கள் |
| **மின் இணைப்பு மற்றும் மின் தொடர்கள் இடமாற்றம்** | |
| A) மின் அளவி / மின்இணைப்பு இடமாற்றம் | 15 நாட்கள் |
| B) தாழ்வழுத்த / உயர் அழுத்த மின் தொடர் மாற்றம் | 60 நாட்கள் |
| C) மின் மாற்றிக் கட்டமைப்பு இட மாற்றம் | 90 நாட்கள் |
| D) மின் இணைப்பு பெயர் மாற்றம் | 7 நாட்கள் |
| E) கட்டண வீத மாற்றம் | 7 நாட்கள் |
| **ஆதாரம்: தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை வாரியம், பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள்** | |

5. மின்சாரம் துண்டிக்கப்பட்டால் மீண்டும் வழங்கப்பட வேண்டிய கால அவகாசம்

| குறுக்கீட்டின் காரணம் | மின் வழங்கல் மீட்பு நேரம் (மணி நேரங்களில்) | | | |
|---|---|---|---|---|
| | மாநகராட்சி | நகராட்சிகள் | கிராமப்பகுதி | மலைப்பகுதிகள் |
| உயர் அழுத்த மின் வழங்கல் குறைபாடு | 1 | 3 | 6 | 12 |
| கம்பி அல்லது மின்மாற்றிக் கட்டமைப்பில் பிழை | 2 | 4 | 6 | 12 |
| பகிர்மான மின் மாற்றிப் பிழை | 24 | 48 | 48 | 48 |
| தனி மின்னிணைப்பு பிழை | 3 | 9 | 12 | 24 |

**ஆதாரம்: தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை வாரியம், பகிர்மானச் செயல்திறச் செந்தரங்கள்**

6. நீங்கள் கலந்தாலோசிக்கக் கூடிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அதிகாரிகளின் படிநிலை அமைப்பு

தலைவர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

↓

இயக்குனர் (பகிர்மானம்), தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

↓

தலைமை பொறியாளர் (பகிர்மானம்)

↓

மேற்பார்வை பொறியாளர்

↓

செயற்பொறியாளர்

↓

துணை செயற்பொறியாளர்

↓

துணை பொறியாளர்



குறிப்பு விவர பட்டியல் :

1. தமிழ்நாடு மின்சார பகிர்மான செந்தரங்களுக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

2. மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

3. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

4. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

5. மின்சார சட்டம் 2003 (www.cercind.gov.in)

6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இணையதளம் (www.tangedco.gov.in)

## மின் நுகர்வோர் மையங்கள் :

**Madras Metropolitan Consumer Rights Protection Centre (MMCRPC)**
No. 118, Fourth Street,
Kamaraj Nagar, Avadi,
Tiruvallur District.
Chennai - 600 071,
Phone: 044-26554434
Mobile: 9382828286/ 9486882626
Email: ecctiruvallur@gmail.com

**Tirunelveli District Consumer Rights Protection Sangam**
No. 9, Kulapirai Street,
Tirunelveli Town,
Tirunelveli - 627 006
Phone: 0462 2338544
Mobile: 94879 83160
Email: ecctirunelveli@gmail.com

**Southern Consumers Organisation for Protection & Empowerment - (SCOPE)**
No. 49, Raja Street, FCI Nagar,
Semmandalam,
Cuddalore - 607 001
Phone: 04142-233798
Mobile: 9443285555
Email: ecccuddalore@gmail.com

An initiative supported by

SHAKTI SUSTAINABLE ENERGY FOUNDATION